# திருப்பத்தூர் மாவட்டம் காலாண்டுத் தேர்வு – 2024

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் மொத்த மதிப்பெண்கள் - 100

விடை குறிப்பு தயாரிப்பு : M.சதீஸ்குமார். பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்) அரசு உயர்நிலைப்பள்ளி, தகரகுப்பம்.

பகுதி – I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1 | அ) ஜெர்மனி , ஆஸ்திரிய ஹங்கேரி, உதுமானியர் | 8 | இ) சணல் |
| 2 | ஆ) லத்தீன் அமெரிக்கா | 9 | ஆ) சூரியன் |
| 3 | இ) ஹிரோஷிமா | 10 | ஈ) பெட்ரோலியம் |
| 4 | ஈ)1991 | 11 | இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை |
| 5 | அ) தயானந்த சரஸ்வதி | 12 | இ) 25 வயது |
| 6 | ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் | 13 | ஆ) தலைமை இயக்குநர் |
| 7 | இ) பஞ்சாப் | 14 | இ) தமிழ்நாடு |

பகுதி – II 2 மதிப்பெண் ( வினா எண் – 28 க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்)

15 . மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக .

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- ரஷ்யா

16. முசோலினி யின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை ?

- முசோலினி 1922 ல் ரோமாபுரி நோக்கி அணி வகுப்பு ஒன்று நடத்தினார்.
- முசோலினியின் வலிமையை கண்ட அரசர் ஆட்சி அமைக்க வரவேற்றார்.

17 . பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களை குறிப்பிடுக.

- உலக வங்கி
- பன்னாட்டு நிதி அமைப்பு

18 . மார்சல் திட்டம் என்றால் என்ன ?

- பொதுவுடமை கொள்கை பரவாமல் தடுத்தல்.
- அமெரிக்க டாலர் பயன் படுத்துதல்.

19 இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் சிறு குறிப்பு வரைக.

- செடி கொடிகளின் மீது அன்பு காட்டினார்.
- சத்திய சாலையை திறந்தார்.
- இவரது பாடல்கள் திரு அருட்பா ஆகும்.

www.Padasalai.Net

20 . இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக ?

- பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்,
- சீனா, நேபாளம், பூடான்,
- மியான்மர், வங்காளதேசம் , இலங்கை .

21. இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகள் யாவை ?

1. அட்சங்கள் 2. கடலிலிருந்து தொலைவு 3. நிலத்தோற்றம்,
4. பருவக்காற்று, 5. ஜெட் காற்று

22. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.

- கால்சியம், அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன.
- ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.

23 . மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.

- இது இரும்பு எஃகு மற்றும் உலோகக் கலவை உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும்.
- வெளுக்கும் தூள், பூச்சிக்கொல்லிகள். வண்ணப்பூச்சிகள், மின்கலன்கள் போன்றவை தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகிறது.

24 . பன்னாட்டு வணிகம் வரையறு ?

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் ஆகும்.

25 . இந்தியாவின் செம்மொழிகள் எவை?

தமிழ் (2004), சமஸ்கிருதம் (2005) தெலுங்கு (2008).
கன்னடம் (2008) மலையாளம் (2013) ஒடியா (2014).

26 . நிதி மசோதா குறிப்பு வரைக .

- இந்தியாவின் வரவு செலவு திட்ட மசோதா .
- மக்களவையில் நிதி அமைச்சரால் அறிமுகப்படுத்துவது .

27. தனிநபர் வருமானம் (அ) தலா வருமானம் என்றால் என்ன ?

தலா வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவி .

| |
|---|
| தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை |

28 . FAO வின் படி உணவு பாதுகாப்பை வரையறு ?

எல்லாம் மக்களுக்கும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு தேவைகளை பூர்த்தி செய்வது .

www.Padasalai.Net

பகுதி - III – 5 மதிப்பெண். (வினா எண் – 42 க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்)

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.

i). 1925.

ii). ரோம் - பெர்லின் - டோக்கியோ.

iii). 1872.

iv). துணை குடியரசுத்தலைவர்.

v). வேளாண்மை.

30. பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக

- 1920 ஆலேண்டு தீவுகள் பிரச்சனைக்கு தீர்வு.
- 1921 போலந்து ஜெர்மனி எல்லை பிரச்சினை தீர்வு.
- 1925 கிரீஸ் பல்கேரியா போர் நிறுத்தம்.
- 1925 லொகார்னோ உடன்படிக்கை ஏற்பட்டது.
- மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பர அமைதி.

31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

- அமெரிக்கா - ரஷ்யா என உலகம் இரு அணிகளாக பிரிதல்.
- அமெரிக்கா - ரஷ்யா இடையே பனிப்போர்.
- அணு ஆயுதப்பரவல் போட்டிகள்.
- காலனி நாடுகள் விடுதலை.
- உலகில் அமைதிக்கு - ஐ.நா. சபை துவக்கம்.
- பெண்களுக்கு வேலைவாய்ப்பு.
- சமூக பொருளாதார மாற்றம்.

32. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி

| வ.எண் | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி |
|---|---|---|
| 1 | ரான் ஆப் கட்ச் முதல் கன்னியாகுமரி வரை உள்ளது | மேற்கு வங்கம் முதல் கன்னியாகுமரி வரை உள்ளது |
| 2 | கொங்கணம் மற்றும் மலபார் கடற்கரைகள் அமைந்துள்ளது | வட சர்க்கார் மற்றும் சோழ மண்டல கடற்கரைகள் அமைந்துள்ளது |

உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்.

| வ எண் | உலோக கனிமங்கள். | அலோக கனிமங்கள். |
|---|---|---|
| 1 | ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களைக் கொண்டிருக்கும் | உலோகத் தன்மை இருப்பதில்லை. |
| 2 | எ.கா. இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்சைட் நிக்கல், துத்தநாகம், தங்கம் | எ.கா. மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம், நைட்ரேட், பொட்டாஷ், டோலமைட், நிலக்கரி, பெட்ரோலியம் |

காரணம் கூறுக. வேளாண்மை (விவசாயம்) இந்தியாவின் முதுகெலும்பு.

**காரணம்** - நாட்டின் 50% வேலைவாய்ப்பும், 25% வருமானமும் தருவதால் இது இந்தியாவின் முதுகெலும்பு.

www.Padasalai.Net

33 . சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மாசேதுங்கின் பங்களிப்பை அளவிடுக .

- ஹனான் நகரில் மாவோ பிறந்தார்.
- சிறந்த பொதுவுடைமைவாதி
- மார்க்கீசிய கருத்துக்களை கற்றவர்.
- 1934 ல் நீண்ட பயணம் வெற்றி
- விவசாயிகள் ராணுவத்தினர் ஆதரவு
- மாசே-துங் தலைமை - சீனா வெற்றிப்பாதை.

34 . இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி .

- ட்ரான்ஸ் இமயமலைகள்
- இமயமலை
- கிழக்கு இமயமலை

முக்கியத்துவம்

- இந்தியா வடபகுதிகளுக்கு கனமழை .
- இயற்கை அரண் .
- வற்றாத நதிகள் பிறப்பிடம் .
- இயற்கை அழகு கொண்டது .
- சுற்றுலா பயணிகள் சொர்க்கம் .
- கோடை வாழிடம் .
- புனித தலம் .
- காடு பொருட்கள் .
- பல்லுயிர் மண்டலம் .

35 . தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

- ஜூன் முதல் வாரம் - தென் இந்தியாவில் தொடக்கம் .
- “எல்நினோ” பெரிய தாக்கம் ஏற்படுத்துதல் .
- இடி மின்னல் உடன் துவக்கம் - பருவமழை வெடிப்பு .

இரண்டு பிரிவுகள்

- 1. அரபிக்கடல் கிளை
- 2 . வங்காள விரிகுடா கிளை
- இந்தியா - 75 சதவீதம் மழைப்பொழிவு .
- இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவு குறைக்கிறது .
- தமிழ்நாடு - மலைமறைவுப் பகுதி - குறைவான மழை .

36 . இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

- பருத்தி உலகின் இரண்டாம் இடம் இந்தியா.
- இந்தியா 1719 பருத்தி நெசவாலைகள்
- மும்பை - பருத்தி செறிவு அதிகம்.
- ஈரப்பத காலநிலை -துறைமுகம் சந்தை வசதி
- மும்பை இந்தியாவின் மான்செஸ்டர்.
- குஜராத் - மேற்கு வங்கம் தமிழ்நாடு
- தமிழ்நாடு கோயம்புத்தூர் - தென்னிந்தியா மான்செஸ்டர். ஈரோடு - திருப்பூர் - கரூர் - மதுரை அதிகம்.

www.Padasalai.Net

37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

மாநிலத்தின் உண்மையான தலைவர்.

- அமைச்சரவை தொடர்பானவை .
- முதலமைச்சர் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமனம் செய்கிறார் .
- அமைச்சரவையை மாற்றியமைத்தல்.
- ஆளுநர் தொடர்பானவை .
- துறை அமைச்சர்களை மேற்பார்வையிடுதல் .
- ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல் .
- கட்சியை கட்டுப்படுத்தல் .
- துறை பணிகளை ஒருங்கிணைத்தல் .

38. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

- உலகில் இந்திய அரசியலமைப்பு நீளமானது.
- இதன் அம்சங்கள் பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்டது.
- நெகிழும் தன்மை - நெகிழாத் தன்மை கொண்டது.
- கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.
- இந்தியாவை சமய சார்பற்ற நாடாக்குகிறது.
- அனைவருக்கும் சுதந்திரமான நீதியை வழங்குகிறது.
- 18 வயது வந்தோர் வாக்குரிமை .
- ஒற்றைக் குடியுரிமை .

39. உலகமயமாக்கல் சவால்களை எழுதுக .

- நன்மை அனைத்து நாடுகளுக்கும் அளித்தல் .
- உறுதியற்ற தன்மை.
- சமத்துவமின்மை .
- குழந்தை தொழிலாளர் .
- பாஸ்ட் ஃபுட் .
- உடல்நலக் குறைவு - நோய்கள்.
- வேலை வாய்ப்பு போட்டிகள் அதிகம் .

40. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?

1. செலவின முறை

- இறுதிப்பண்ட பணிகளுக்கு - செலவுகளின் கூட்டுத்தொகை.

2. வருமானம் முறை

- நாட்டில் பண்டங்கள் உற்பத்தி - ஆண்கள் பெண்கள் வருமானம் .

3. மதிப்பு கூட்டு முறை

- இடைநிலைப் பண்டம் = இறுதிப் பண்டம்
- டீத்தூள் + பால் + சர்க்கரை = தேநீர்.

41. காலக்கோடு வரைதல். 1900 – 1950 (ஏதேனும் 5 உலக நிகழ்வுகள்)

# காலக்கோடு

## உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900–1950)

**1 அலகு = 10 ஆண்டுகள்**

1900

1910

1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்

1912 – முதல் பால்கன் போர்

1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்

1917 – ரஷ்யப் புரட்சி

1918 – முதல் உலகப் போர் முடிவு

1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920

1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்

1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு

1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்

1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1930

1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்

1934 – நீண்ட பயணம்

1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது

1938 – மியூனிச் உடன்படிக்கை

1939 – இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940

1940 – பிரிட்டன் போர்

1941 – முத்துத் துறைமுக நிகழ்வு


1942 – ஸ்டாலின்கிரேடு போர்

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு / ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

1950

www.Padasalai.Net

42.



பகுதி - IV – 8 மதிப்பெண்

43. அ ) முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவரி.

- ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கை, எதிரணி சேர்க்கை.
- வன்முறை சார்ந்த தேசியம்
  - ⇒ இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, தேசபற்றின் வளர்ச்சி.
- ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை.
- ஜெர்மனியும், இங்கிலாந்தும் போட்டியில் இறங்கியது.
- பிரான்சு - ஜெர்மனி பகை.
- பால்கன் பகுதியில் ஆஸ்திரியா – செர்பியா இடையேயான பகை.
- முதல், இரண்டாம் பால்கன் போரில் துருக்கி மற்றும் பல்கேரியா தோற்றது.
- உடனடிக்காரணம் ஆஸ்திரிய இளவரசர் பெர்டினான்ட் படுகொலை.


**அல்லது**

ஆ ) இந்தியாவின் மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

| மண் | உருவாக்கம் | பயிர்கள் | பரவல் |
|---|---|---|---|
| 1. செம்மண் | கிரானைட், நைஸ் பாறைகள் சிதைவுறுதலில் உருவானது. | நெல், கரும்பு, பருப்பு வகைகள் | தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், தக்காண கிழக்கு பகுதி |
| 2. சரளைமண் | வெப்பம் மற்றும் குளிர் | காபி, ரப்பர், முந்திரி, மரவள்ளிக்கிழங்கு | அசாம் மலைப்பகுதிகள் – கர்நாடகா மேற்குத் தொடர்ச்சி மலை – கேரளா |
| 3. காடு மற்றும் மலை மண் | பனிமழை – வெப்பநிலை மாறுபாடு | காபி, தேயிலை, நெல், மக்காச்சோளம், உருளை, பார்லி | ஜம்மு – காஷ்மீர், இமாச்சல், உத்திரகாண்ட் |
| 4. வறண்ட பாலை மண் | குறைந்த ஈரத்தன்மை – குறைந்த இலைமட்குச் சத்து – வெளிர் நிறம் | பருத்தி – சோளம் | இராஜஸ்தான், வடக்கு குஜராத், தெற்கு பஞ்சாப் |
| 5. உப்பு கார மண் | சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது. | | ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், பஞ்சாப், |


www.Padasalai.Net

# INDIA MAP - OUTLINE



www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# INDIA MAP - OUTLINE (அல்லது)




www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com